# கங்கை நீர் வற்றவில்லை

## கவிதைத் தொகுதி

உடப்பூர் வீரசொக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

எல்லோராலும் கவிஞர்களாகி விட முடியாது. அது இயற்கையாகவே ஒருவருக்குக் கிடைக்கும் ஆற்றலாகும். ஆற்றல் பெற்ற எல்லோருமே தமது கவிதைகளை நூலுருவில் கொண்டு வர முடியாது. ஒரு சிலரே அவற்றை நூலுருவில் கொண்டு வந்துள்ளார்கள்.

அவர்களில் வட மேல் மாகாணம் தந்த கவிஞர் உடப்பூர் வீரசொக்கனும் ஒருவர். இளைஞர், கவிதை எழுதுவதில் வல்லவர். ஒரு அரசாங்க உத்தியோகத்தர், பத்திரிகை நிருபர், சமூக சேவகர் என்ற பல துறைகளில் சமுதாயத்துடன் தன்னை ஈடுபடுத்தியிருக்கும் வீரசொக்கனின் ''கங்கை நீர் வற்றவில்லை'' என்ற இக்கவிதை தொகுதி அவரது இரண்டாவது படைப்பு என்று அறிந்து மகிழ்வுற்றேன்

இந்திய வம்சாவளியினரான உடப்பூர் வீரசொக்கன் ஏற்கனவே ''உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் வரலாறு'' என்ற நூலை எழுதி வெளியிட்டிருந்தார். இது முழுக்க முழுக்க கவிதைகளைக் கொண்டது. அவ்வப்போது பத்திரிகைகளுக்கு எழுதியவற்றை ஒன்று சேர்த்து நல்ல தொரு முயற்சியாக இக்கவிதைத் தொகுதி வெளியாகியுள்ளது,

எந்தவொரு துணையுமின்றி சுய முயற்சியாக இக் கவிதைத் தொகுதியை வெளியிடும் வீரசொக்கனை பாராட்டுகிறேன். தொடர்ந்து அவர் பல ஆக்கங்களை வெளிக் கொணர வாழ்த்துகிறேன்.

**எம். எஸ். செல்லச்சாமி**
இ. தொ கா. செயலாளர்
கைத்தொழில் ராஜாங்க அமைச்சர்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

புதுக்கவிதை எழுதும் அற்றல் படைத்தவர்கள் சிலர் இருக்கிறார்கள். வேறு சிலர் மரபுரிதியான கவிதை எழுவதில் வல்லவர்களாக இருக்கிறார்கள். ஆனால், இரு வகை கவிதைகளையும் எழுதுவோர் மிகக் குறைவு அவர்களில் உடப்பூர் வீரசொக்கன் குறிப்பிடத்தக்கவர். ஒரு அரசாங்க உத்தியோகத்தர், பத்திரிகையாளர், கவிஞர் என்ற வகையில் அவரது சமுதாயப் பணி சிறந்து விளங்குகிறது.

பழகுவதற்கு இனியவரான தம்பி வீரசொக்கன் ஏற்கனவே திரௌபதா தேவி வரலாறு என்ற நூலை அழகுற வெளியிட்டிருந்தார். உடப்பு சமய, ஆசார, அனுட்டான முறைகளையும். பக்தி வழிபாட்டையும் அந்நூலில் அவர் மிக அழகாகக் குறிப்பிட்டிருந்தார். இந்நாட்டில் வேறு எப்பகுதிகளிலும் இல்லாத சமய, கலாசாரத் தன்மை உடப்பு இந்துக்களுக்கு உண்டு. தமிழகத்தில் இராமநாதபுரப் பகுதிகளிலிருந்து வந்து குடியேறிய மூதாதையர்களது வழித்தோன்றல்கள் இன்று சமய, ஆசார அனுட்டான முறைகளில் சிறந்து விளங்குகிறார்கள்.

திரௌபதா தேவி ஆலய வரலாறு குறித்து அவர் எழுதிய நூல் மிகுந்த வரவேற்பை பெற்றது.

இப்போது ஏற்கனவே அவ்வப்போது பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளியானதும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டதுமான கவிதைகளைக் கொண்டு தொகுத்து ''கங்கை நீர் வற்றவில்லை'' என்ற தலைப்பில் நூலை வெளியிட்டிருக்கிறார். கவிஞர்களதும், எழுத்தாளர்களதும் ஆக்கங்கள் கட்டாயம் நூலுருவில் இடம் பெற வேண்டும். ஆனால், அதற்கு பொருளாதார உதவிகள் சாத்தியமற்ற இச்சூழ்நிலையிலும் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் இரண்டாவது நூலை வெளியிட்டிருக்கிறார். தனது எண்ணத்தில் உதித்த பல்வேறு உணர்வுகள் கவிதைகளாக இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. மிகப் பயனுள்ள முயற்சி. அதேவேளை பாராட்டத்தக்கது மாகும். அவர் தொடர்ந்து பல நூல்கள் எழுத வேண்டும் என இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமியை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**கணா. சுபாஷ் சந்திரபோஸ்**
சிரேஷ்ட உதவி ஆசிரியர்
வீரகேசரி

12-5-1991.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மனதில் உறங்கும் உணர்வுக்குப் பெயர் கவிதை. உள்ளத்தில் பிறக்கும் கவிதைகள் உள்ளத்துடன் வாழ்கின்றது; வளர்கின்றது. அப்படி பிறந்தவைகளை வண்ணக் கவிதைகளாக வடித்தேன். கவிதைகள் என்ன என்பதை அறியாத புரியாத காலகட்டத்தில் எழுந்தவைகளையும் கவிதைகளாக தீட்டினேன்.

வடமேல் மாகாணத்தில் கலை ஆர்வம், கவி உணர்வும்; கலை ஞானமும் கொண்ட உடப்பினிலே சம கால இலக்கிய பரப்பில் ஒரு பரிமாணத்தை ஏற்படுத்த விளைந்தவையே இக்கவிதைத் தொகுதி,

இதற்கிடையிலே நாளேடுகளில் பிரசுரமாகும் கவிதைகளை, ஆக்கங்களை நுகர்ந்த அறிவுக்குரிய என் ஆசிரியர்களான திரு. வீ. நடராசா, திரு. கி. ஸ்ரீஸ்கந்தராசா ஆக்கமும், ஊக்கமும் தந்து என் கவிதைக் கனலை நெய் யூட்டி வளர்த்தவர்கள் இவர்கள்.

சின்னவனின் இக்கவிதைத் தொகுதிக்கு சீரான சிறப்பான அணிந்துரை தீட்டிய வீரகேசரியின் சிரேஷ்ட உதவி ஆசிரியர் திரு. கண. சுபாஷ் சந்திரபோஸ் என் மதிப்புக்கும், நன்றிக்கும் உரியவர். என் கவிதை ஆற்றலுக்கு களம் அமைத்துத்தந்த செய்தி நாளேடுகள், சஞ்சிகைகளுக்கு அடியேன் நன்றிக்கடன் பட்டவன். என் முயற்சிக்கு காத்திரமான பங்களிப்பு நல்கும் சகோதர உள்ளங்களாள திரு. வீ. கதிரவேல், திரு. கே. லட்சுமணன், திரு. ஆ. கனகரத்தினம் (இ.தொ.கா. அமைப்பாளர்) உடனிருந்து எழுத்துப்பணி செய்யும் அன்புக்குரியவளான சரோஜினிக்கும் மற்றும் ந. பொன்னம்பலம், திரு. க கரு அவர்கள் ரவி அண்ணன் என் வாழ்நாளில் மறக்கத்தான் முடியுமா?

புதுக் கவிதை மலர் சோலைக்கு இட்டுச் செல்லும் நல் கனிகளை நுகரும் அன்புணர்வு கொண்ட நண்பர் கால் தங்கள் திருக்கரங்களில் இதைப் படைக்கின்றேன்.

உள்ளே நுழையுங்கள்; நுகருங்கள்: உள்ளம் தரும் முடிவை எழுதுங்கள் நன்றி.

*உடப்பு 1991-09* **வீரசொக்கன்**

## முத்துக்குளியல் (மித்திரன் வார மலர்)

உடப்பூர் வீரசொக்கனை ஆசிரியராகக் கொண்டு இளம் தாரகை வட்டம் வெளியிடும் கவிதைத் தட்டச்சு ஏடு அலை ஓசை.

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்னும் பாரதி வாக்குடன் இனாமாக வரும் இதழ் இந்த அலை ஓசை எட்டுப் பக்கத்தில் ஏழெட்டுக் கவிதைகளுடன் வெளி வரும் அலை இதழ்.

இது ஒரு முத்திங்கள் கவி ஏடு. புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க அமைதியான கிராமம் உடப்பு உடப்பிலிருந்து அலை ஓசை கேட்பது இயற்கையே. அமைதியாக இலக்கியப் பணியாற்ற வந்திருக்கும் அலை ஓசைக்கு நமது வாழ்த்துக்கள்.

*17-3-1985* — ரவீந்திரன்

## குறிப்புகள் (தினகரன் வார மஞ்சரி

அலை ஓசை என்னும் தட்டச்சு கவிதை ஏடு புத்தளத்திலிருந்து வருகின்றது. உடப்பூர் வீரசொக்கன் இந்த முத்திங்கள் கவிதை ஏட்டின் ஆசிரியர்.

வடமேல் மாகாணத்தின் வளம் மிகும் தமிழ் மண். கடற்கரை அண்டியே நல்ல கலை வளம் கமழுகின்ற உடப்பெனும் கிராமம் அதிலிருந்து கேட்கும் அலை ஓசை அடக்கமாய் இலக்கியம் செய்ய இளம் கவிஞர் துணையுடன் கிளம்பியிருக்கிறது. அலை ஓசை நின்று நிலைத்து இலக்கியம் செய்ய வாழ்த்துகிறோம்.

*1985-3-17* — திரேசா-சியாமளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் 'அலை ஓசை' முத்திங்கள் ரோணியோ கவி ஏட்டின் செய்தி இதழ்களின் பார்வையில்--

இலக்கியச் செய்திகள்:- (வீரகேசரி வார இதழ்)

உடப்பிலிருந்து அலை ஓசை ! வடமேல் மாகாணத்தில் ஓர் அமைதியான அழகிய தமிழ் கிராமம் உடப்பு. வரலாற்றுச் சிறப்பும் இக்கிராமத்துக்கு உண்டு.

பல கலைஞர்களையும், கவிஞர்களையும் தந்த உடப்பிலிருந்து 'அலை ஓசை' கேட்கப்போகின்றது.

அங்கிருந்து தோன்றிய இளம் கவிஞர் உடப்பூர் வீரசொக்கன் தான் பிறந்த வளர்ந்த கிராமச் சூழலை பின்னணியாக வைத்து புனையப்பட்ட கவிதைகளை 'அலை ஓசை'யில் இடம் பெறச் செய்துள்ளார் கவிஞர்.

உடப்பிலிருந்து நாம் கடல் ஓசையை கேட்டுள்ளோம். இனி உடப்பூர் வீரசொக்கனின் 'அலை ஓசை'யை நாம் கேட்கலாம்.

— ரஸ ஞானி

நூல் அரங்கு :

'அலை ஓசை' தினகரன் நாள் இதழ்

இலக்கிய தாகங் கொண்டவர்களின் இலக்கிய முயற்சிகளை இன்றைய இலக்கிய ஏடுகளே வெளிக்காட்டுகின்றன. 'விடா முயற்சி பலனைத்தரும்' என்ற வாசகத்திற்கிணங்க உடப்பூர் வீரசொக்கன் 'அலை ஓசை' என்ற கவி நயத்தை வெளியிட்டுள்ளார் அலை ஓசை தனிக்கையேடு.

இலக்கிய கடலிலே ஓயாது எழுந்து கொண்டேயிருக்கும் கவி அலை ஓசையின் பூபாளம் என்றுமே முகாரியாக மாறக்கூடாது. முயற்சியே உயர்ச்சியின் பாதை.

1985-02-25

# முன்னவனே தேரேறிவா!

### காப்பு

நிந்தனைய நினைவுறுத்தி நினைவெல்லாம் யாமுற்று;
பந்தனை பாடி பணிந்து போற்றி சீர்மேகும்
சிந்தனையில் சேர்ந்திருக்கும் சிவமாக்கி வல்லானை;
எந்நாளும் தொழுதிடுவோம் ஏற்று;

### விருத்தம்

முண்டு புகழ் முன்னுரைக்கும் முன்னவனின் கோவிலில்;
முத்தாக கொலுகொண்டான் வடிவழகியோடு;
தொண்டுபேர் பெருமைகளை வானோர் கூற
தேரேறி வரும் காட்சி மாட்சிமையை பாரீர்!
அண்டிவரும் ஆவணிமாத பௌர்ணமி பட்சத்தில்
அழகோர் உற்சவம் பூணும் அழகுக்காட்சி;
கண்டுகளி கனிந்த கருணை முழங்கும்;
கண்ணோர் களிக்கும் காட்சியை காணீர்!

— உடப்பூர் வீரசொக்கன்

2-9-90 வீரகேசரி வாரவெளியீடு

# சூதினைக் களைவோம்

பாடிப் படியேறும் பாட்டாளி செல்வத்தைப்
பகிர்ந்திட மீட்டிடுவோம் — அவர்
தேடிடும் செல்வங்கள் வேறு இடங்களில்
சேர்வதைத் தடுத்திடுவோம் — நம்மை
நாடி வருகின்ற நரிக்கூட்ட வர்க்கத்தை
நையப் புடைத் திடுவோம் — நாளை
ஓடி வருகின்ற ஒளிமய மானந்த
உலகினைப் படைத் திடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத கொள்கைக்கு ஏனிந்த நம்வாக்கை
இறைஞ்சியே வேட்டை யாடுறார்? நம்
எல்லையி லுள்ளோர்கள் ஏகாந்த நிலையிலே
இனிதாக உணர்ந்தால் போதும் — ஒரு
கல்லிலே இருமாங்காய் கழன்றிட எறிந்திடும்
கள்ளர்கள் மொய்ப்பார்கள் — அவர்
சொல்லிலே மயங்கிட்டால் சுயமானம் பாழாகும்
சூதினைக் களைந் திடுவோம்.

— உடப்பூர் சொக்கன்

''காங்கிரஸ்'' 1991-3-15

## பவனி வருவாய் புத்தாண்டே!

கடந்த ஆண்டை நினைக்கையிலே
நடுங்கும் உள்ளங்கள் துயராலே
அச்சம் கொண்டு அடிபணிந்து
அகதி முகாம்களில் அவலக்குரல்!
துக்கமாகவே வாழ்ந்திட்ட
துயரைப் பொறுக்க யாருளார்?
தொல்லை விதைத்த தொண்ணூறே
தொலைந்து ஓடிப் பறந்திடு!

இன்றே மலரும் புத்தாண்டே
இனிமை வாழ்வை விளைத்திடுவாய்
அன்றே பிறந்த கொடுமைகளை
அறவே ஒழித்து வருவாயே!
நன்றே செய்யும் நற்கருமம்
நானிலம் போற்ற நவில்வாயே!
பண்பை பாரில் பறைசாற்ற
பவனி வருவாய் புத்தாண்டே!

— உடப்பூர் வீரசொக்கன்

30-12-90 மித்திரன் வாரவெளியீடு



## அம்மாவுக்கு!

போற்றிப் புகழ் உரைப்பேன்
என்னி னிய அம்மாவுக்கு
ஏற்றிய தீபம் அவளென
இதயத்தே நினைத்துள்ளேன்!
தேற்றி யெனை வாஞ்சையொடு
சேர்த்தணைத்து, நன்றே
சாற்றிய அவளுக்காய்
சாற்றினேன் கவிமாலை.

பத்துமாதம் எனைச்சுமந்து
பலநாட்கள் கண்விழித்து
முத்தாக எனை வளர்த்து
முறுவலிலே குதூகலித்து
சித்தமெங்கும் அன்பொன்றைச்
சேமித்து வைத்தவளே...
எத்தினமும் உனது நினை
வோங்குமம்மா; உறுதியது!

அம்மா எனும் அமுதத்தை
ஆர்ப்பரிக்கும் எனது மனம்
இம்மா நிலத்தில் எனக்கென்று
நீ போதும்!
சும்மா நான் கிடக்காமல்
சுறுசுறுப்பாய் இயங்கிடவே
எம்மாத் திரம் உதவி
எந்தனுக்கு நீ செய்தாய்?

— உடப்பூர் வீரசொக்கன்

1989 ஜூன்-ஜூலை மலையக சிறப்பு மலரில் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திட்டங்கள் பல...!

திட்டங்கள் பல தீட்டி திறம்பட செய்தால்
திறமைகள் பல பெற்றிடுவோம் — அந்த
திறமையின் பல பேருண்மையால் இந்நாட்டில்
திறனுடன் நாங்கள் வாழ்ந்திடுவோம்.

உழைத்து உயர்வதே என் திட்டம் அதில்
உற்பத்தி உயரினைபெருக்கிடுவோம் — மக்கள்
உற்பத்தியின் தன்னிறையடைந்து இந்நாட்டில்
உயரினை நாங்கள் பெற்றிடுவோம்

சோம்பறிகளாக உயர்ந்தது போதும்
நாமும் திட்டங்கள் பலதீட்டிடுவோம் — அந்த
திட்டத்தை நிறைவு செய்தால் இந்நாட்டில்
நன்மைகள் பல பெற்றிடுவோம்.

74-9-22 திகதி 'வாலிப வட்டம்' நிகழ்ச்சியில் வானொலி
யில் ஒலிபரப்பானது.

## கானல் நீர்

நினைவலையில்
நித்திலம்
ரீங்காரமீட்டி
நினை வழங்கிய
என் மலர்
கனவலையில்
கருகி
கவர்ச்சியற்ற
கானல் நீராகியது.

1982 சித்திரை சுடர் இதழில்



## அந்திவானம்

விண்ணைக் கிழித் தெறிந்து
வெண்ணிலவில் பவனி வந்த
இந்நாளும் புவியரங்கில்
ஏழையெனும் ஓர் கும்பல்
மண்ணை வளம் படுத்தி
நலமாக வாழ்வுரைக்க
கண்ணற்ற அந்தி வானம்
கனிந்து கலைந்ததாமோ?

கொள்ளை லாபமடிக்கும்
கொள்கையிலா முதலாளி குழாம்
எல்லையில்லா வரவைக் கண்டு
ஏப்பமிட்டு எருக்களித்து
எள்ளளவும் இரக்கமின்றி
தொல்லையில் துயர் துடைக்க
விடிவுகாண ஏங்குதாமே?

1985 ஜனவரி தடாகம் சஞ்சிகை

## வாழ்த்துவோம் திருநாளை

தீபத்தின் ஒளிவடிவே — வருக
தீராத தீன்சுவையை படைத்திடுக,
தாபத்தின் வாஞ்சியை கொண்டிங்கே.
தாளாத மகிழ்மையை சிருஷ்டிப்பாய்

பட்டாடை உடுத்தி பணிந்திடுவோம் — நல
சித்தாடை சிறக்க திழைத்திடுவோம்;
கட்டாடை கட்டி நாம் மகிழ;
ஏத்தாடை ஏற்றி எழில் கொள்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகையான தீபத்தில் ஒளியேற்றி — நல்ல
வளமான வாழ்க்கை அமைத்திடுவோம்;
தர்மிஷ்ட கொள்கை படைத்திங்கு
தர்மத்தின் வடிவாக ஒளிதருவா

நரகாசூரனை நச்சித்த நாளிதுவாம் — இந்த
நாளினம் போற்றி துதித்திடுவோம்
தீபாதாரனை கொண்டிங்கு — வழுத்தி
தீபத்தால் திருநாளை வாழ்த்திடுவோம்!

*1988-11.08* மித்திரன் தீபாவளி சிறப்பு மலரில் இக்
கவிதை பிரசுரிக்கப்பட்டது.

## பொங்கலோ பொங்கல்

பொங்கலோ பொங்கல் — என்று
பொங்கி மகிழும் பொங்கல்
மங்களமும் மனையும் பொங்க — எம்மை
மகிழ வந்த பொங்கல்.

சித்திரங்கள் சிலைகள் தீட்டி — நல்ல
சிந்தனைகள் உரமும் ஊட்டி
எத்தினமும் நினைவைக் காட்டி — எம்மை
எழுச்சி ஊட்டும் பொங்கல்.

புத்தாடை புனைந்துடுத்தி — புது
மணமலர் மனைதொடுத்தி
கத்தாடை கனதொடுத்தி — எம்மை
கனிய வைத்த பொங்கல்:

மனம் பொங்கி நலம் பொங்கி — நல
வான் உரைக்கும் பொங்கல்
தினம் பொங்கி ஒற்றுமை பொங்கி — எம்மை
திழைக்க வைக்கும் பொங்கல்.

*1987-01-14* திகதி தினகரன் பொங்கல் சிறப்பு மலரில்



## கங்கை நீர் வற்றவில்லை

1945ம் ஆண்டு
ஊற்றெடுத்து
தவழ்ந்து பிரகாசித்த
கங்கை...
வற்றாது வளமோடு;
செல்வச் செழிப்போடு.
பல - தடைகளைத்தாண்டி;
முன்னேறிய
கங்காதேவி
1958ம் ஆண்டு
சீற்றத்தால் பெருக்கெடுத்த
கங்கை...
அப்பாவி தமிழர்களை
பலி கொண்டு
வேதனை விளிம்புக்கு
இட்டுச் சென்றது
பின்னரும்...
சீரற்றகால நிலையா
தமிழ் அன்னை
வேதனை அடைந்தாள்
1983ம் ஆண்டு
கொடூரமாக வீசிய
சூறாவளி பெருங்காற்றால்
பல்லாயிரக்கணக்கான
தமிழ் உயிர்களை
பலிகொண்டதுடன்
சொல்லொணா வேதனையின்
கறைபடிந்த வடுவாகவே
நினைவு கூறுகின்றது.
அட்டூழியங்கள் பல
புரியும்...
கங்கையின் உணர்வுகளைக் கண்டு...
தமிழ் அன்னை
கண்ணீர் சிந்திய
வண்ணமிருக்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சித் தென்றல் வீசுதம்மா

மலையரும்பின் ஊற்றினிலே ..
மனம் மகிழ வீசிவர,
கலையரும்பின் காட்சியிலே ..
கனிவளம் பெருகிவர,
தலையரும்பின் காட்சியிலே...
தண்மலர் கொய்துவர,
ஓலையரும்பின் இன்னிசையிலே...
புரட்சித் தென்றல் பாயுதம்மா.

குறிஞ்சி மாதவனின் கொவ்வையெழில்
கொலு வீற்றிருக்க
அறிவு அவனிலே அருள்பெற
அடியவர்கள் புடைசூழ
தெளிந்த நல்லறிவு சிரஞ்சீவியாக
ஊற்றெடுத்துப் பாய்கின்ற
களித்த கவின்மிகு காட்சியில்
குறிஞ்சித் தென்றல் வீசுதம்மா.

1981 பங்குனி - சித்திரை புதிய உலகம் (குறிஞ்சி மலர்) சஞ்சிகையில்

# உழைப்பே உயர்வு

உழைப்பே உயர்வென்று உணர்த்தும்
உண்மை நெறி போற்றும் பொங்கலாம்
உழவே உயர்வென்று உவந்தூட்டி
அவனி சிறக்கும் பொங்கலாம்
உழைக்கின்ற தொழிலாளர் நடுவே
ஊதியம் பெருக்கும் பொங்கலாம்
உணர்கின்ற உள்ளவனிடத்தில்
உறக்கம் தீர்க்கும் பொங்கலாம்



ஏர் முழக்கம் எழுச்சி பெற
ஏற்றிடுவோம் எழிலான பொங்கலை
பார் முனையில் பசிபஞ்சம் பறந்தோட
பாடுபட்டுழைக்கும் பண்பான உழவனிடத்தில்
பொங்கிப் புணரும் பொன்னோர் நாளில்
புறப்பட நகர்வோம் புதிர் விடைகாண
சிந்தனையில் சீர்கொண்டு சிறப்பு
சீரோடு தமிழ் மணக்கப் பொங்கிடுவோம்.

*1984-01-14* தினகரன் பொங்கல் சிறப்பு மலரில்

# வாசமற்ற மலர்

மாசற்ற ஜோதியா ......
மருதலித்த — அயல்வீட்டு
தண் மலர் ......
பூத்து கனிந்து
கனகாம் பரம்
மணம் வீசி ......
ஜ்வாலையிட்டு பிரகாசித்த
என் மன வலையில் ......
சிக்குண்டு — புதுமலராக
பூத்து ..........பூரித்து
புன்முறுவல் காட்டி
புளகாங் கிதம் கண்டு
புது வதுவையில்
வதிகாணும் வேட்கையில்
கட்டுண்ட போழ்து
''இழிவான சாதியென்று''
''லேபல்'' குத்தப்பட்ட — என்
ஆத்ம காதல் மலர்
மனம் மதிகெட்டு
வாசமற்ற மலராக
மணம் இழந்து
கருகி சாம்பலானது.

1982 கார்த்திகை சுடரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயிற்றெரிச் சல்கள்

தாயின் மகப் பேறில்
தவழும் ...
மழலைச் செல்வங்கள்
மண்ணில் மருதளிக்கையில்
மாந்தரின் மகிழ்மைகள்
நெகிழ்மைகள்
மாசற்ற ஜோதியின்
வாஞ்சை வெளிப்பாடுகள்
யாவும் ..
உண்மைத்தாற்பரியங்களை
உரைக்கும் போது
தொல்லைகள் துயரங்கள்
அனர்த்தங்கள் இளம்பாடுகள்
ஈறாக...
பெற்றோரின்
வயிற்றெரிச் சல்கள்.

1979 மார்கழி சுடர் சிறுவர் சிறப்பிதழில்

## தீபங்கள் ஏற்றிடுவோம்

தீராத துன்பங்கள் சுடர் விட்டாலும்
தீபங் கள்ஏற்றி ஒழித்திடுவோம்: இனி
ஏறாத ஏழைகளின் வாழ்வில்
ஏற்றி போற்றிடுவோம் — தீபம்
பாடாத பாட்டுகள் பாடி நாம்
பட்டாசு கொளுத்தி மகிழ்ந்திடுவோம் — மன
மாடாக உழைத்து நம் வாழ்வை
மன மகிழ்வோடு புரிந்திடுவோம் — சீர்
சீரோடும் சிறப்போடும் சிறக்க
சிந்தித்து சிவமாக்கி ஆட்கொள்வோம்.

1987 அக்டோபர் 21ம் திகதி தினகரன் தீபாவளி சிறப்பு மலரில் பிரசுரிக்கப்பட்டது



## சீர் உடப்பு

சீர் கொண்டு சிறப்போடும்,
சிறந்திளங்கும் சிலாபத்தில்
பேர் ஊரின் பெருமைகள் சிறப்பேக
பேருண்மை கண்டிளங்கும்
பார் புகழும் பாஞ்சாலி
குடி கொண்டு கொலுவீற்றிருக்க
கார் கொண்ட கனிவான உள்ளத்தில்
கடலோசை இனிவிளங்க
ஊர் சிறந்த உடப்பு தன்னில்
ஒலிக்கின்ற அலை ஓசை.

### வளம்

மணியான மண் வளமும்;
பணிவான மக்கள் குழாமும்,
தனியான தமிழ் சிறப்பும்
தழைத் தோங்கும் செந்தமிழும்;
நிலையான நீர் வளமும்
நீர் கொண்ட சிற்றாறும்;
கடல் வளமும் கலைவளமும்
தளைத்தோங்குது உடப்பு தனிலே.

### தொழில்

கடற்றொழில் செய் தொழிலான;
ஜீவனோபாவமாக் கொண்டு;
படகோட்டி பாய்மரம் பாய்ச்சி;
பவ்வியமாக பவனிவந்து;
நிலை கொண்ட நீங்க மற;
சிறு தொழிலையும் செய்வித்து;
எத் தொழிலையும் ஏற்றமுறபெற்று;
வாழ்வாங்கு வாழும் கூட்டம்

1984 அலை ஓசை முத்திங்கள் இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுத்தாள்

திருக்கரங்களில்
பவனி வரும்
மாசற்ற மாணிக்கமே
வாழ்க்கைப் பாதையை
வளமாக்கி ......
வளமோடு
வாழ வைக்கும்
யதார்த்த வடிவமைப்பு
எந்நாளும் நிந்திக்கும் ......
மன வாடையில்
பண வாடையாக
உரைக்கும் உருவத்தின்
நெருடல்கள் ......
பாவ காரியங்கள்
புரிய
நாளெல்லாம்
நச்சரித்து மனதை ......
குடையும்
நாச காரியம் செய்ய
சிந்தனைச் சீர்மை
புது வடிவம்
புகட்டுகின்றது.
பணத்தைச் சுற்றி
பாதுகாப்பு அரண்கள்
கேடர்கள் ...... கம்பிகள்
அடைக்கலம் கொடுக்கும்
ஏழைகளின் கைகளில்
எட்டியும் ......
ஏறெடுத்து பார்க்காத
புதுமைத் தாள்கள் ......

1989-6-18 வீரகேசரி வார வெளியீடு



# இனிமையுடன் இருப்போம்

பிறக்கின்ற போதினிலே பிறவாத உறவு
இறக்கின்ற இணைதனிலே நெஞ்சமற உயர்வு
பறக்கின்ற பட்சிதனிலே பாடித்திரியும் உணர்வு
உறங்கின்ற உயிர்களிடத்தில் ஊழ்வினைக் கனவு.

நல்லதொரு நட்புக்கு நலவாழ் ஏச்சம்
வல்லதொரு வனத்துக்கு வடிவுஓர் தாக்கம்
தொல்லதொரு தொடர்புக்கு தாழாமை பங்கம்
நில்லதொரு நினைவுக்கு நினைகொண்ட ஊக்கம்

இத்தனையும் தொல்லையும் இனிநலம் துறப்போம்
பந்தனைப் பாடி பணிந்துருகி படிப்போம்
அத்தனையும் ஆக் கவும்ம் அவனில் துளப்போம்
இத்தனையும் தாண்டி நாம் இனிமையுடன் இருப்போம்

1984 அல்லி சஞ்சிகையில்

# அவள் நாயகி

இரவு முழுவதும் இனிமையிலே — திங்கள்
இறைந்தெழும் பாரினிலே:
கனவுக் கன்னியாக சென்றனனே; மன
நனவோட்டத்தில் நகர்ந்தனலே:

உயிர்த்தெழும் காலை ஒளிப்பொழுதில்
பறிந்துறைக்கும் பார் பதியில்;
அணைத்திட்டால் மனவோட்ட உறவில்
பிணைந்திட்டால் ஜோதியின் உணர்வால்

கன்னி வதனத்தில் காவேரி நாயகி
உறவு வாஞ்சைக்கு அவன் மணாலி
அன்பு ஊடலின் ஆசை நாயகி
என்றும் பவனி வரும் காதல் நாயகி.

1985 யூன் - யூலை தாகம் சஞ்சிகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரைமகள் வந்தாள்

மானிடர் துயர்நீக்கி மாவுவகை அளித்திட
மாநிலம் வரவேற்கும் புத்தாண்டுப் பெண் வந்தாள்
மாவிலைத் தோரணம் கோலங்கள் அணிசெய்ய
மாதினியாள் மண்ணிற்கு வருகை தந்தாள்.

துன்பங்கள் நீக்கி துயரங்கள் போக்க
துள்ளியோடி வந்தாள் துக்கங்கள் களைந்தாள்
பந்தங்களோடு பாங்காய்க் கொண்டாட
பக்கத்தில் வந்தாள் பரவசம் தந்தாள்.

விடிவெள்ளியாய் எம் வாழ்க்கைக்கு விடிவைத்தர
வெண்ணொளியாய் உதித்தாள் கண்ணீரைத் துடைத்தாள்
முடிவில்லாத பேரின்பம் சகலருக்கும் கொடுத்தாள்
முன்னெப் போதுமில்லாத ஆனந்தம் அளித்தாள்.

1984-4-16 மித்திரன் வார மலரில்

## வெற்றி கொள்ள...!

குன்றெனும் கொள்கையில் கோலமிடும் குலமகளே
நின்றெதிர் நிலை கொள்ளும் நினை மீட்டும் நிலமகளே
மன்றத்து மதி படைத்த மாசற்ற மனைமகளே
கன்னத்து காரிகையில் கனிவான கலை மகளே

அன்னத்தின் அழகுநடை ஆடிவரும் அன்புநடை
சொன்னத்தின் சேர்விளங்கும் சொகுசான சொர்ப்பநடை
அன்னத்தின் வடிவழகி வாஞ்சையுற வண்ணநடை
சின்னத்தின் செந்தமிழன் சீர்பெறும் சிறப்புநடை

வல்லதொரு விதிவகுத்து வாழ்க்கையில் நிலைகொள்ள
நல்லதொரு இல்லறத்தில் நற்பணியில் நலமேக
செல்வமொரு பாதையில் சொகுசாக வாழ்ந்திடவே
வெல்லுமொரு நல்லறமாய் வெற்றிகள் பெற்றிடுவாய்

1985 கவிமலரில்



## அவளின் நான்

கன்னியெனும் மின்னலெனும் நங்கை — அவள்
கனி கொண்ட கச்சித மங்கை
தன் னிலமை தடுமாறிய காளை — அன்பு
அமிழ் கொண்டு வாழ்த்து கின்றான் அவளை

நெற்றினிலே வளைந்த துருவப் பொட்டு — நேரில்
போற்றி புகழ் பாடிடுவான் தொட்டு
காற்றினிலே சுழன்றாடும் கதராடை — அதை
ஏற்றியெனை யாணைப்பான் என் அன்பு சிட்டு

வண்ணமது வதனத்து ரோசா — வது
வான் புகழ் சொல்லுக்கு ராசா
மண்ணிறம் மாந்தளிர் மேனி — சொல்
வாஞ்சைக்கு அவளோர் வானரசி

ஆதரவும் ஆதனங்கம் துடிக்க — மெய்
ஆலிங்கனம் ஆர்ப்பரித்து வெடிக்க
நானினமும் அவள் நாணம் கண்டு — உறவால்
நானின்று அவவொன்றி நின்றேன்.

1954 நவம்பர் - டிசம்பர் ''காற்று'' சஞ்சிகையில்

## 1990ஆம் ஆண்டே ஓடிப்போ!

வாழ்வை சிறக்க வேண்டி
வந்தாயே தொண்ணூறாமாண்டே
பையவே பவனி வந்தாய்
பாரெல்லாம் துயர்வடித்தாய்
எல்லையில்லா ஓலங்கள்
எங்கும் ஒலித்தனவே
தொல்லைகளை தொடரவைத்த
தொண்ணூறாமாண்டே ஓடிப்போ

— உடப்பூர் வீரசொக்கன்

1991-01-01 வீரகேசரி நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி பயிலும் மங்கை

மங்கையின் மாந்தளிரில்
மஞ்சிளம் வார்பெடுத்து
வாழ்த்தொழி தொக்கி நிற்கும்
பால் வதனம் பாவையள்

பட்டென உருவம்
கட்டென் துலங்கும்
தெள்ளமர் தேனிசைக்கும்
மங்கையவள் திருமேனி

கன்னி மொழி பேசி
தேன் தமிழில் ருசி ஏற்றி
பண்ணி சையில் பாடி நிற்கும்
அமுத சொல் விளங்கும் அவள் உரை

முத்தான முன் வரிசை
கத்தாகி கவி பாடும்
எத்தாலும் எழில் கொள்ளும்
கொத்தான பல் வடிவம்

கோலம் இசை பாடி
கொவ்வை சிரிப்பாடி
அஞ்சுகக் கத்தின்
மாதுள மது மங்கை

அனைத்திடத் துள்ளம்
ஆவர்ண கிள்ளை
மணந்திட மணங் கொள்ளும்
மணாளி மண மங்கை

கரம் பற்ற அஞ்சுகத்தை
காளையவன் மணம் கொண்டான்
தாரமாக்கி தான் வாழ
தவிப்பான் தலைவியாக்க

1985 அலைஓசை முத்திங்கள் இதழ்



# அவளோடு

மடலோடு நீ வடிக்கும் — உறவும்
கடலோடு தாவிப் பாயும் அலையும்
நடமோடிப் பாய்கின்ற காற்றும்
உடலோடு ஒன்றினேன் உளையால் — மடலோடு...

தென்றலில் தவழ்கின்ற இசையில் — உணர்வால்
தெம்மாங்கு மீட்கின்ற பாஷையில்
தேனாக சுவைக்கின்ற ஆசையில்
அவளோடு நானின்றேன் ஓசையில்
கண்ணான மணியே
கற்பூர ஒளியே
உன்னோடு நானே
உணர் விழந்து நின்றேன் — மடலோடு...

முத்தாக வடிக்கின்ற சங்கே — முழு
நிலவாக ஒளிதரும் திங்கே
பாட்டாக நான் வடித்தேன் அங்கே
ஏடாக எழுதிடுவேன் இங்கே
கத்தான சிலையே
கனியமுது அன்பே
நீ இன்றி நான்
நினைவிழந்து நின்றேன்.

1985 அலை ஓசை முத்திங்கள் இதழில்

# நிறைவான வாழ்வு தருவாய்

இன்றே மலர்ந்தது புது வருடம்
இனி எம் வாழ்வு இனிமை கொள்ளும்
அன்றே, பிறந்த கொடுமைகளை
அறவே ஒழித்து நீ, வருவாய்
நின்றே எம்முடன் நினைவு கொண்டு
நிறைவான வாழ்வுக்கு வழிசமைப்பாய்.

1989-01-01 வீரகேசரி வார இதழ் பதிப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தை நாளாம்

பாரில் உழைக்கும் உழவனுக்கு திரு நாளாம்
பாட்டாளி மக்களுக்கோர் பெருநாளாம் - நாட்டின்
உழைக்கும் வர்க்கம் கொண்டாடும்
உண்மை பயக்கும் நன்னாளாம்.

காடுகள் வெட்டி நாட்டை களனியாக்கி
கமஞ் செய்து மக்கள் சீர்வாழ, அவனில்
நாடுகள் போற்றி நன்மை நவிலும்
உத்தம உழவனுக்கு உயிர் நாளாம்.

பஞ்சம் பசி பட்டினிகள் அழிந்தொழிய
பார் புகழ பாமரர்கள் திடம்வாழ - உழவன்
நெஞ்சமெல்லாம் தமிழ் வீரம் வீறிடும்
நேர்மை நெகிழ்வுணர்த்தும் தைத்திருநாளாம்.

உழவர் மக்கள் உயர் கொடுத்து
உழம் பூரிக்கும் உன்னோர் நாளாம் - நாட்டின்
உழவர் தொழிலின் அச்சாணி என்று
உழைக்கும் கும்பல் கொண்டாடும் தை நாளாம்.

1980 தை மாத சுடர் பொங்கல் மலரில்

## பேதையானால்

மனிதனாக வகழ்வது சிக்கலடா - இங்கு
மாந்தருள் வதியம் பஞ்சமடா;
கனிவாக வாழ்வது கஷ்டமடா, நிம்மதி
களைந்த உறவு கொஞ்சமடா'

கல்வியை கற்பது நிறைவுபெற - வாழ்வில்
கருத்துடை மன்னனாக ஆக்கிவிட;
பள்ளியில் பலநாள் பாடம் கற்று - எந்தன்
பதிவிரதை வாழ்வுக்கு வாழ்வுரைக்க



சிந்தனை சிவமாக்கி எனையாள - சீர்
சிறப்பாங்கு சிந்ததைகொள் வாழ்வுடா
பந்தனை பாடி பணிந்து போற்றி - பாரில்
பலமான பார்புகழ் பவனிவர

மனதாலே மங்கை உறவு வகுத்துறைத்தான் - பாதை
மணமாகி வதுவை நலம் பெற்றுவிட்டான்;
உணவாகி உள்ளன்பு கொடுத்துவிட்டு - எந்தன்
குணவதியின் கொள்கையில் பேதையானான்.

1985 ஜுன், ஜுலை, ஆகஸ்ட் புதுமலர்
றோனியோ இதழ்

## சுதேசியப் பொங்கல்

சும்மா இருந்து சுகம் கண்ட காலம்
எம்மாத்திரமோ அதனால் இன்று
நம் நாட்டு வறுமை நாமே தந்தோம்
எம் நிலை உணர்ந்து உழைத்தார் உழவே

கார் பிடித்தோட்டலே கண்ணியம் என்று
கருதிய காலம் மலை ஏற வேண்டும்
ஏர் பிடித்தோட்டலை ஏற்று நம் நாட்டை
சீர் படுத்திடுமாம் செல்வம் சிறக்க

அந்தியர் தந்த அரிசியை உண்டு
ஆகா தென்று அறை கூவி நிற்றோம்
அயராதுழைப்பில் நம்மலர் தந்த
அரிசிப் பொங்கலை அமர்ந்து உண்போம்

உழவுத் தொழிலும் எஞ்சிட வேண்டும்
உயர் குடி உழவர் ஏந்திட வேண்டும்
நாடு நலம் பெற உழைத்திட வேண்டும்
நல்ல தோர் பொங்கலே!... பொங்கிட வேண்டும்.

1978 பெப்ரவரி - மார்ச் நாவல் மலரில் பிரசுரிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கு

உள்ளமெல்லாம் உறவு கொண்டு
உணர்கின்ற போதினிலே
கள்ளப் பார்வையில் காரிகை போல்
கர்ச்சித்த என் அன்பே.

உன் பார்வை விழியின் மேல்
என் நோக்கு விழுந்தலில்
மனம் கொண்ட காதலாக
மனம் போல உறவு கொண்டோம்

முத்துச் சிரிப்பழகி...
முந்தானை முகவழகி ..
கத்தாக நானுனக்கு
கன்னி முத்தம் தந்திடுவேன்

கண்ணாளா நீ என்று
கண்ணீர் வடித்தாலும்
உன் அன்பாலே நானின்று
உணர்விழந்து தவிக்கின்றேன்

பண்பாளா வென்று பல பேர்
வாழ்த்துக்கள் கூற
படைத்திடுவேன் என் அன்பே
உனக்கோர் புதுக்கவிதை.

*1983-10-1* காற்று இதழ்

# மே தினம்

பாட்டாளி மக்களின் நன்றிக்கி மேதினம்:
கூட்டாளி யாக கூடி மகிழும் மேதினம்;
எட்டுத்தி ற்கும்ஏற்றம் கொள்ளும் மேதினம்;
பாடி மகிழ்ந்துபறை சாற்றும் மேதினம்;



நாளை வாழ்வு மீட்சி சொல்லு மேதினம்;
வாழும் பொழுது நன்றி நவிலு மேதினம்;
மாலை போட்டு மணம் கொள்ளு மேதினம்;
மானம் சிறந்த நாளை மீட்டு மேதினம்;

அடிமை விலங்கை அறுத்த மேதினம்;
அடிப்படை வாழ்வுக்கு அடியேற்ற மேதினம்;
கடின உழைப்புக்கு கட்டியம்தரு மேதினம்;
தேடிய உழைப்பின் வெற்றியே மேதினம்.

*1990-5-01*

# சாதி ஒற்றுமை

ஊருக்கு உபதேசமாகி நின்றான்
ஊட்டுக்குள்ளே சாதிச் சண்டை
யாருக்காக போராட்டம் - என்றான்
நகைக்கின்றாள் வீட்டுக்குள் மனைவி

நாதியற்ற மக்களுக்கு
நவின்ற சொல்லம்பு
சேதியற்ற...
சொல்லாகிவிட்டது.

உழைத்துண்போம்,
ஒற்றுமையைக் காப்போம்,
ஒருவனுக்கும் அடிமை கொள்ளோம்
என்ற குரல் ஒலித்த
கூட்டத்தில்...
முண்டியடித்து நிற்கின்றார்
தலைமை பதவி வேண்டி ..

ஒற்றுமையின் சின்னம்
ஒன்றுபடுவோம் - என
ஒருதலைபட்ச கோஷம்... ஆனால்
வீட்டுக்குள்ளே ஒற்றுமை
இல்லை சாதிச்சண்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லறம் என்னும் நல்லறம்

உழைப்பைத் தேடி அலைவ தினாலே
உண்டி பெருக்க வாழ்வ தினாலே
ஊர்கள் தோறும் உலாவுவ தினாலே
ஊன் இன்றி திரிகின்றான்

வீடுகள் தோறும் விழிப்பதினாலே
வீணோர் காலத்தை கழிப்பதினாலே
சும்மா சுகம் காண நினைப்பதினாலே
சோம்பேரி வாழ்வு வாழ்கின்றான்

தொழில்கள் செய்ய வெறுப்பதினாலே
தோழமை கொண்ட தொடர்புகளினாலே
தாழாமை தன்னை வாட்டுவதினாலே
தவிக்கின்ற மனம் போல் தாவுகின்றான்

இல்லறம் ஒன்று இல்லாமையினாலே
கொள்ளாமை உன்னைக் கொல்லுகின்றதாலே
சொகுசாக இருக்க நினைப்பதினாலே
சோறுக்கு அலையாய் அலைகின்றான்

நல்லறம் ஒன்று அமைவதினாலே
தன்னறம் கொள்ள வேண்டுவதினாலே
சொந்தறம் சொர்ப்பணம் சோபிக்கவேண்டி
இல்லறம் கண்டு இனிமையுடன் வாழ்வாய்

*1984 மாசி - பங்குனி காற்று இதழில்*



# தீப நாளே நீ...வா !

தீப நாளே வா......மங்கள
தீப நாளே வா...

ஏழைகளின் வாழ்வில்
ஏழ்மை நீங்கவே...
பாட்டாளி மக்களின்
பசிப் பிணி தீர்க்கவே...
வசந்தமான வாழ்வில் எழில் வீசி
தீபநாளே நீ ..வா

அரக்கனாம் நரகாசூரனை
நசித்திட்ட நாளாம்
கொடியவனின் அதர்மத்தை
கொண்டொழித்த நாளாம்
இத்துனை சிறப்பினைக்காணும்
தீப நாளே நீ ..வா

*1988-11-8 திகதி வீரகேசரி*
*தீபாவளி சிறப்புமலரில் பிரசுரிக்கப்பட்டது*

# மலர்ந்தாய் புத்தாண்டே..!

பன்னீரைத்தெளித்து பவ்விய மோடு;
பாங்குடனே பணிந்து வாழ்த்து கின்றோம்
எண்ணிய இன்பம் எட்டு திக்கும்!
ஏற்ற முடன் எடுத்தோம்புகின்றோம்;
கண்ணிய மோடு கடமை பூண்டு;
காலத்தை வென்று வாராயே!
தென்னிய தொடர்பை தொன்மை உறவாக;
தொடர்ந்து வா தொண்ணூறாமாண்டே

*1990-01-01 புதுவருட கேசரி சிறப்பு மலரில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைப் பொங்கல்

மண்மகளாம் பொன்மகள் மேல்
மையல் கொண்ட பரிதி
பொண்ணொளியாம் கதிர்கரத்தால்
பூமகளைத் தழுவ,
மண் மகரும் கல்வியிலே
புயல் முகந்து செல்ல
விண்மகள் - மேல் மழை வந்தால்
விளைந்தணளே நெல்லாள்

தமிழர்தம் அருதுழைப்பின் பயனைக் கண்டு
அகமகிழும் திருநாளாம் பொங்கல் நாளாம்
உழைப்பவர்தம் அரிதுழைத்த விளைத்த விண்ணமுதல்
திளைத்துப் பெருமித மூரும் தெய்வ நாளாம்
உலகோர் அனைவருக்கும் உணவூட்டும் தியாகி என்ன
உழைக்கின்ற உழவனுக்கோர் பொன்னேர் நாளாம்
உழைப்பவனே உலகுக்கு அச்சாணி என்றே
உண்மை நெறி போற்றுகின்ற பொங்கல் நாளாம்.

*1981 தை - மாசி புதிய உலகம் சஞ்சிகையில்*

# துதித்திடுவோம்

கத்தி கடலொழிக்கும்
கருணைகொள்ளும் கன்னிகா தேவிக்கு
பத்தி சிரத்தையுடன் பார்புகழும்
பாஞ் சாலிதேவி யருள்வேண்டி
முத்தி பெருக்கெடுக்கும் முந்தங்களில்
முன் னோர்களால் துதிகொண்ட
ஏத்தி புகழ் உரைப்போம்
எழில் கொண்ட திரௌ பதாதேவிக்கு

*முந்தல் ஸ்ரீ திரௌபதையம்மன் தீமிதிப்பு வைபவத்தில்
1984-6-29 வீரகேசரி நாளிதழில்*



# உறவு வாழ்க்கை

..லம் முழுதும் காத்திருந்தாள்
..ளை அவன் வருவான் என்று
..டைக் கண்ணால் பார்த்திருந்தாள்
..வுலகில் சங்கமித்தாள்

இளவேனில் காலம் அது
இளம் காற்று இளருகை புரிந்தது
ஜனரஞ்சகமான வேளையில்
இளம் காட்சி தருகின்றான்-என்நம்பி

அவன் அழகில் என் மனதை
..த்நிகையா வைத்த பின்னர்
..ர் நிறைந்த பொய்கையென
வண்டாக நுகர கடித்தாள்

அத்தான் என்றழைத்தேன்
ஆசை நிறை கொட்டி விட்டான்
அப்பெண்ணும் ஆர முதலில்
ஆருயிர் பெற்று விட்டேன்

வாழ்க்கை என்றும் சக்கரத்தில்
வாழ்ந்து காட்ட போட்டியிட்டேன்
போதும் ஐயோ.. போதும் - இந்த
பொல்லாத உறவு வாழ்க்கை

*(1984 அலை ஓசை முத்திங்கள் இதழ்)*

# வாழ்வு பொங்க வருவாய்

பொங்கலோ தைப்பொங்கல்; தமிழர்
போற்றி மகிழும் பொங்கல்!

திங்களாக வந்து எம்மை; இன்று
திழைக்க வந்துதித்த பொங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாசல் கூட்டி-புது;
வீதிக் கோலம் போட்டு;
ஏடு தொட்டு பணிந்து;
ஏற்றம் காணும் பொங்கல்;

தோரணங்கள் தொடுத்து
தோற்றம் பல வளைத்து:
பாரணங்களால் பாடிப்பணிந்து:
பரவசம் பகரும் பொங்கல்!

உழவர் திருநாளில் எம்மை - உணர்வை
ஊட்டி வந்த திருநாள்!
பால் போல் பொங்கி - எம்மை
வாழ்வு பொங்க வந்திடுவாய்!

*1989-01-14* **மித்திரன்** பொங்கல் சிறப்பு மலரில்

# மாசற்ற புத்தாண்டே வாராய்

சஞ்சலம் நீங்கி சமதர்மம் பூக்க
சந்தோச சௌபன்யம் உதிக்க
பஞ்சம் பசி பட்டினி நீங்க
பாரினில் மகிழ்ச்சி பொங்க
எஞ்சிய ஏழ்மை எழும் துயர்கள்
எட் டுத்திக் கும் அகன்றிட
மஞ்சள் பூசி மகிழ்மை மாண்புற
மாச ற்றபுத் தாண்டே நீவாராய்!

— உடப்பூர் வீரசொக்கன்

*90-4-14* வீரகேசரி



# வைரங்கள்

என்னியம்மாவே;
கன்னிமுத்தம் தந்து;
கல்வி பயிர் ஊட்டி;
காலம் காலமாக காட்டிய உன்
அன்பென்னும் வாஞ்சையைக் கண்டு;
கறைபூத்த நாட்களையெல்லாம்
இறைமீட்டி...இறைஞ்சி...
எருக்களித்து...
நிற்கின்றதே...
குறும்புச் செயல் கண்டு
கொவ்வைச் சிரிப்பாலே
குதூகழித்த போழ்ந்தும்
பளளி செல்ல
படோடபமின்றி...எனையனுப்பி
சமூக நெக்குறையைக் கண்டு
பார்வை சொல்லால் அடித்தவர்களை
யான்...
பாங்குடனே ஜீரணிக்கின்றேன்
ஏழ்மையைச் சூறையாடும்
கொழுத்த முதலாளிகளின்
கொழும்பு நோட்டுக்கு
என்னை இறையாக்கி
நாசமாக்காமல்
பகட்டான வாழ்க்கையில்
பவனிவரும் பச்சோந்திக்
கும்பலின் பார்வைக்கு
அடிமை கொள்ளாமல்
உன் போன்ற அம்மாக்கள்
இருப்பதினால்...
என் போன்ற ஏழைத்துயர்கள்
வீறு நடைபோடுகின்றது
ஏ.. இன்னருமைத்தாய்குலமே...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று என் போன் றோர்கள்
குப்பையில் கிடந்த குண்டுமணியானாலும்
இன்று...பிரகாசிக்கும்
பவனி வரும்...பட்டை தீட்டிய
வைரங்கள்.

(1984 அலை ஓசை முத்திங்கள் இதழ்)

# அமுதப் பொங்கல்

சீர் கொண்ட செந்தமிழர் திருநாளாம்!
சிறப்பிமிகு அவர்தம் பெருநாளாம்!
பேர் தமிழர் பெருமைகளின் புகழ்ச்சிகளை
பெயர் கொண்டு போற்றிடும் நன்னாளாம்!
ஏர் பெருக்கி எல்லோரும் எழுச்சிக் கண்டு
எழிலான வளநாளாம், தைநாளில்
பார் சிறக்க உழுதிடும் ஏர் உயர
படைத்திடுவோம் அமுதப் பொங்கள்!

1988-01-15 மித்திரன் சிறப்பு மலரில்

# தீப நாளிது

தித்திக்கும் தீபத் திருநாளிது;
தீனமுதம் தீட்டும் நன்நாளிது;
முத்திக்கும் முத்தான முன்நாளிது;
மூவண்ண சிறப்புக்கு பேரானது;
பக்திக்கு பாங்கான தீபநாளிது;
பாவங்கள் போக்கும் நன்நாளிது:
பொங்கிப் பூரிக்கும் புதுநாளிது
பூம்புனல் போல்வந்த தீபநாளிது!

1989-10-28 வீரகேசரி தீபாவளி சிறப்பு மலரில்



# காசாலே சாவு

பாடையிலே...பண வாடையிலே
பறந்திட்டார் மன ஓடையிலே...
சோடையிலே...சொல் நடையினிலே
சோதிப்பார் நீரிடையிலே...
ஏடையிலே எழுத்தாடையிலே
ஏற்றிடுவார்... எழிச்சியினிலே...
காலத்திலே கடகாலத்திலே...
காவியங்கள் பல செய்திடுவார்
வார்த்தையிலே... வசைபொழிவதிலே
வதைத்திடுவார் தீனக்கண்ணாலே...
பாட்டினிலே வசைபாடிடுவார்
பொல்லாங்கு சொல்லும் பொய்யாலே...
எதனாலே... இப்படி வந்ததென்றால்
காசாலே வந்த இந்த சாவாலே

—1990

# சொந்தங்கள் இல்லை

எனதன்பே
திட்டங்கள் தீட்டி
சட்டங்கள் போட்டு
பட்டங்களாக பறக்குதடி
குண்டுகள் போடும்
பம்பர் விமானங்கள்.

சொகுசாக வாழ
சொந்தங்கள் இல்லை
பந்தாகி...
அடிபட்டு
பரிதவித்து நிற்கின்றனடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டடுக்கும் மாளிகையில்
ஏப்பமிட்ட வாழ்க்கையில்
ஏந்திலையானைக் காண
ஏங்கித்தவிக்கின்றனடி

சொந்தங்கள் இன்றி
பந்தங்கள் எனக்கூற
வந்தனங்கள் இல்லயடி
சொந்தங்கள் இல்லையடி

## பாரதியே..
## பாவலன்
## சாரதி

பார் புகழப்
பா வடித்த
பாரதியே.!
'பா' யாத்தயனுக்கும்
பார்ப்பனுக்கும்
பாவலருக்கும் சாரதியே.!
ஏழிசை எழிலாம்
எட்டைய புரம் தந்த
கவிமணியே,,,
நாடு சுதந்திர வேட்கைக்காக
நீ கண்ட கனவெல்லாம்
நனவாக...நா உரைக்க...
சுதந்திர விடுதலைக்கு
செப்பிய சொல்லோவியங்கள்
கவிச்சரமாக
தீஞ்சுவை தீட்டும்
'தீ' ஜுவாலையாக...



கங்கநாதம் பொழிந்தாய...!
காணி நிலம் வேண்டி
கவிக்கணைகள் தொடுத்தாயே அன்று!
இன்று உன் வழித்தோன்றல்கள்
நிலம் வேண்டி
நிலை தடுமாறி நிற்கின்றனரே..!
தங்கத் தமிழை
தரணி போற்ற...
ஏட்டில் வடித்ததை...
மீட்டி ஜீரணித்த போழ்து
தாயன் பாக இரைமீட்டுகின்றதே!
பெண் விடிவுக்காக - அவனில்
புரட்சி கீதங்களின்
சங்கப் பேரிகையில்...புதுமலர்
பெண்ணை காணத் துடித்தாயே...!
இருள் சூழ்ந்த சமுதாயத்தின்
மீட்சிக் காக
இதமாக நீ உதிர்த்த
இங்கித பாக்களெல்லாம்
பலமான சமுதாயத்துக்கு
அத்தி வாரமிட்டன
பாரதியே...
பார்ப்பனுக்கும்
பாவலருக்கும் சாரதியே...!

1983 சித்திரை-வைகாசி
''சுடர்'' கவிச்சரங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வதுவை நலப்பா !

திருநிறைச் செல்வ நம்பி இம்மானுவேல் புஸ்பராஜனும்
திருநிறைச் செல்வ நங்கை மெடோனா வசந்தியும்
இரு மனம் கலந்தின்ப இல்லறம் புக்கும் போழ்து
திருமண விழவுகண்டு திளைத்திட்ட இளவல்களின்
வாழ்த்து

## கலப்பு நலம் வாழி

நாயகனை வாழ்த்திருத்தி நயமுடனே நாம் பணிந்து
நட்புடனே கொடுக்கின்றோம் நயமுடனே வாழ்வீர் என
வசந்திராஜனின் இல்லறமென்னும் நல்லறத்தில்
பாங்குற வாழப் பணி

## தலைவ நலம் வாழி

எழுத்துலக சிருஷ்டியில்
இணையில்லாப் புதுக்கவிஞன்
ஏற்றமுற கவி படித்தான்
எல்லையில்லா உறவு கொண்டான்
பாக்கள் பல வடித்து
பாங்குடனே பரிசு பெற்றான்
ஒப்பாரும் மிக்காரும் இன்றி
இவன் காற்றுடனே சங்கமித்தான்
திக்கானும் தீந்தமிழை
சுவைபடவே வடித்திடுவான்
மங்காப்புகழ் பெற்றான்
புகழ் கொண்ட புஸ்பா
தூங்கநிலை உயிர்ப்புடையான்
தூயகற்பின் வதுவை கண்டான்
துணைவாய் வாழி

1984 மாசி-பங்குனி காற்று இதழில் ஆசிரியர்
திருமணத்தன்று பாடியது.



## தலைவி நலம் வாழி

முத்துச்சிரிப்பழகி முத்தமிழின் பேச்சழகி
காக்கும் தமிழச்சி தமிழ்காண் அழகி
சால் பினைப் போல் செந்தமிழ்புலமை கூடும்
வாழ்த்துறைவதனம் வடிவழகி வசந்தி
அறிவுலக மேடையில் ஆசிரியைப் பணி
அர்த்தமுடனே ஆர்ப்பரிப்பாள் இவள் நங்கை
கரும்பு மொழி பேசி கனிந்த குரலில்
நலம் காட்டும் கற்புத்திறன் வாழி
ஒருவனுக்கு ஒருத்தி எனும் நோக்கில்
திருவிளக்காய் இவ்வாழ்வில் வாழ்த்து
காலமெல்லாம் கணவனுக்கு கடமை பூண்டு
கற்பரசி எனும் புகழில்
நீடு வாழ்க!

## மண நலம் வாழ்க

காதலெனும் இருமணத்தில்;
கன்னிகாதாரம் பூண்டு;
ஆதரவு பட்டதே இல்லறச் சோலையில் இருவரும்
மனைவி அமைவதை அன்றோர் மருதளித்தபோதிலும்
இறைவன் கொடுத்த வரமாம்
இல்லற வாழ்வில் இணைபிரியா வாழ்கவே.

# நாளை பிறக்கும் நம்முலகு

பெரியோரே எனதன்புக்
குரியோரே!
அன்புக்கு வளம் சொல்லும்
ஆருய் அன்பருக்கும்
வணக்கங்கள்! வழமான
தோழமை கொண்ட உறவாலே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீச்சான நினைவெல்லாம்
மூச்சான கவியாக்கிப்
பேச்சாக பேர்சொல்லும்
பேரளிவுக் கலைக் கூடமாகும் தண்ணில்
சன்மார்க்க பணி செய்யும்
சாகிராக் கல்லூரிதனில்
சாத்துகவி யான் பாட
அழைத்த ஐம்பவான் ஐவரத்து
அன்னவருக்கு என்னுடைய
இன்னமுதப் பெரு நன்றி

தும்பிக்கை யானில் மலர்தூவி
நம்பிக்கை கொண்டிங்கே
எண்ணிக்கையாகவே ஏழு நிமிடங்களில்
முன்கவியாய் முத்தமிழில்
முறைசால் கவிதை தொடுக்றேன்
தப்போ தக தக வென
தந்திட்டார் தலைப்புதனை
தப்பியில் பெரியோரே
தயவான மண்ணிப்பு
இப்போ இவளிங்கே
இசைக்க கவி என்று
இட்ட தலைப்பு
''நாளை பிறக்கும் நம்முலகு''

பிறக்கும் உடைதனை
பிறவாத நாளாக-உடன்
பிறக்கும் நினைவான நினைவுகள்
ஓங்கட்டும் வீரமாக,



# ''நாளை பிறக்கும் நம்முலகு''

பிறக்கின்ற நாளெல்லாம்
பிறவாத உறவாகி
தவிக்கின்ற தயவெல்லாம்
தந்தளிப்பாகவே இங்கே
எரிகின்ற நெருப்பெல்லாம்
ஏழையின் (தமிழ்) இடர்வாழ்வில்
பிறக்கின்ற நாளே—நீ
பிறந்திடுவாய் நம்முலகு!

கடலென்றும் தரையென்றும்
கடலோர பகுதியெங்கும்
ஊரென்றும் வீடென்றும்
ஊரார் பெருங் காடென்றும்
தேரெங்கும் தெருவெங்கும்
தேடியலைந்து குண்டுகள் போட்டாலும்
பிறக்கின்ற உணர்வுகள்— நாளை
நம் உலகாக பிறக்கும்

பசியென்றோ மழையென்றோ
பரிதவித்து நிற்கின்றோம்
வெயில்லன்றோ குளிரென்றோ
வெந்துணர்வு கொண்டாலும்
நோய் என்றும் நொடியென்றும்
நொய்ந்து மனம் இருந்தாலும்
விடிவொன்று பிறப்பது நாளை
நம்முலகமாகின்றது.

ஒன்றெல்ல இரண்டெல்ல-தமிழருக்கு
ஒருகோடி துன்பங்கள்
இன்றல்ல நேற்றல்
ஏறும்பல ஆண்டாக
பொய் என்றும் பொருட்டென்றும்
சொல்வார்கள் என்னாலும்
பொய்யரசி இல்லாமல்
பிறப்பது நாளை நம்முலகமடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மண்ணா

எங்கள் இதய மண்ணா !
பேர் அறிவு கொண்ட
பேரறிஞர் - சொன்னார்
தங்கத்தில் ஆனமுத்தல்லாம்
முத்தல்ல — என்றாயே !
தமிழின் சின்ன நடையும்
சிங்கார பேர் நடையும்
வண்ணமான வடிவு கொண்ட
வளமான சொல் நடையும்
சீர்பெற்று விளங்கும்
சீரான செந்தமிழ் என்றாயே !

அந்த அருந்தமிழ் இந்நாட்டில்
மதிப்பிழந்து பதிகெட்டு
யாருமற்ற பிள்ளையாக
மண்டூகமாகி விட்ட தன்னா

ஆனால் அண்ணா
என்றோ ஓர் நாளில்
பிறக்கின்ற உலகில்
நாம் உறவாக ஒளி வீசும்
உன்னைத்தான் நான் இன்று
சொல்லத்தான் வந்து விட்டேன்
புல்லைத்தான் பூண்டைத்தான்
பொசிக்கிதத்தான் உண்டாலும்
பிறக்கத்தான் போகுதடா
நாளை நம்முபகமடா

# நன்றி

பாடவேண்டும் கவியரங்கில்
பணிந்த நண்பர் பாயிஸ்களுக்கும்
நாடி நின்று நற்பணி புரியும்
நல நோக்கும் மாணவ இலக்கிய
மன்றத்துக்கும்
கூடி வந்து கூட்டமாக
கூடிநிற்கும் அன்புச் செல்வங்களுக்கும்
பாடி—பணிந்து நின்று
விடைபெற்று நிற்கின்றேன்
நன்றியெனக் கூறி

*(1987-07-01 நாளன்று புத்தளம் சாகிராக் கல்லூரியில் கவிஞர் ஜவாத் மரைக்கார் தலைமையில் இடம்பெற்ற கவியரங்கில் பாடப்பட்ட கவிதை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் :- கல்யாணி

# காத்தவளே எம்மை

### பல்லவி

கடலொழி முழங்கும் உடப்பினிலே,
காத்து எமதுயர் அமைப்பவளே,

### அநுபல்லவி

'தீயில் குளிர்த்து திரௌபதையடிபணிந்து
தீராத இடர்களை தீர்த்தருள்கிறாய்

### சரணம்

சிந்திய தீயை சிரத்துடனே கூட்டி,
சிர்பா தமது தனலில் நடனமிட்டு
பாவக் கொடுமைகள் பவ்வியமாகவே-தீர
பார்த்த சாரதியை உம் மலர் அடிபணிவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர்

வடமேல் மாகாணத்தில் புகழ் பெற்று விளங்கும் உடப்பு தமிழ் கிராமத்தில் பிறந்தவர் கவிஞர் வீரசொக்கன். புத்தளம் மாவட்டத்தில் முந்தல் உதவி அரச அதிபர் பணிமனையில் பணியாற்றி வருகிறார். 1977 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் தமிழ் முன்னணி நாளிதழான வீரகேசரியில் நிருபராக இருந்து வருகிறார். இவரது கவிதைகள், கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளன.

உடப்பு இளந்தாரகை வட்டத்தின் அமைப்பாளராகவும் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளிலும் இருந்து உழைத்து வருகிறார். 'அலையோசை' என்ற பெயரில் முத்திங்கள் கல் அச்சு கவிதை தொகுதியும் இவரால் வெளியிடப்பட்டுள்ளது.

'ஏற்கனவே' உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வரலாறு என்ற நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

( இளம் தாரகை வட்டம் வெளியீடு )

பதிப்பு : 1991 மே

திரு சென்ட்ரல் பிரின்டர்ஸ், கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org